# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

சாதனை சிகரம் தொட

# வெற்றிக்கு வழி

# 10

# சமூக அறிவியல்

**(புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது)**

அன்பார்ந்த ஆசிரியர்களே! மாணவர்களே வணக்கம்!

- பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 2019-2020ஆம் கல்வியாண்டிற்குரிய பத்தாம் வகுப்பு (தமிழ் வழி) சமூக அறிவியல் பாடநூலில் இடம்பெற்றுள்ள முதல் அலகினுடைய புத்தக வினாக்களுக்கான விடைகளை மட்டும் நீங்கள் ***முதல் மாதத்தேர்வினை எளிமையாக எழுதுவதற்காக*** இணையத்தில் வெளியிட்டுள்ளோம்.
- மாணவர்கள் சமூக அறிவியல் பாடத்தை புரிந்து கொண்டு சுலபமாகப் படிப்பதற்கும், அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற எழுத வேண்டிய முறைப்படி (Good Presentation) எழுதுவதற்கும் ஏற்ற வகையில், 'வெற்றிக்கு வழி சமூக அறிவியல் கையேடு' எமது ஆசிரியர் குழுவால் செம்மையான முறையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

எமது வெற்றிக்கு வழி கையேடுகளை பயன்படுத்தி பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்களை பெற வாழ்த்துகிறோம்!



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 1. முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   **அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்** ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி
2. எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?
   அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு **இ) அடோவா** ஈ) அல்ஜியர்ஸ்
3. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா **ஆ) ஜப்பான்** இ) கொரியா ஈ) மங்கோலியா
4. “ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்” எனக் கூறியவர் யார்?
   **அ) லெனின்** ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
5. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
   அ) ஆகாயப் போர்முறை **ஆ) பதுங்குக் குழிபோர்முறை**
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை
6. எந்த நாடு முதல் உலகப்போருக்குப் பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) ஜெர்மனி **ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்**
7. சர்வதேச சங்கத்தின் முதல் பொதுச் செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   **அ) பிரிட்டன்** ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
8. பின்லாந்தைத் தாக்கியதற்காக சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
   அ) ஜெர்மனி **ஆ) ரஷ்யா** இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ***1894*** ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ***இலண்டன்*** உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
3. ***1902*** ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் ***மாசிடோனியா*** நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் ***ரஷ்யா*** பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ***கிளமென்சோ*** ஆவார்.
7. லெனின் போல்ஷ்விக் அரசை நிறுவுவதற்கு முன்னர், தாராளவாதிகள், மிதவாதிகள், சோஷலிஸ்ட்கள் ஆகியோரின் புதிய கூட்டணிக்கு ***டிராட்ஸ்கி*** பிரதமராக தலைமை ஏற்றார்.
8. ***1925*** ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

### III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) முதல் உலகப்போர் வெடித்த போது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
   ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
   iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
   iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, இஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவை கூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது.
   **அ) i), ii) ஆகியன சரி** ஆ) iii) சரி இ) iv) சரி ஈ) i), iii), iv) ஆகியன சரி
2. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
   ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
iv) சூயஸ்கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி இ) iv) சரி **ஈ) i), ii), iv) ஆகியன சரி**

3. **கூற்று:** ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருட்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
**காரணம்:** இரு நாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்தன.
அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு
***ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.***

4. **கூற்று:** ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
**காரணம்** : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
***அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.***
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

## IV. பொருத்துக

1. பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - அ) வெர்செய்ல்ஸ்
2. ஜிங்கோயிசம் - ஆ) துருக்கி
3. கமால் பாட்ஷா - இ) ரஷ்யாவும் ஜெர்மனியும்
4. எம்டன் - ஈ) இங்கிலாந்து
5. கண்ணாடி மாளிகை - உ) சென்னை

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - ஆ | 4 - உ | 5 - அ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**
- ♣ ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.
- ♣ இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமைமிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**
♣ இங்கிலாந்து ♣ பிரான்ஸ் ♣ ரஷ்யா

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**
- ♣ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று
- ♣ பிரான்சின் பேரினவாதம் நாட்டுப்பற்று
- ♣ ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று

**4. பதுங்குக் குழி போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**
- ♣ பதுங்குக் குழிப்போர் போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் அல்லது அகழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவியது.
- ♣ முதல் உலகப்போரின்போது இப்பதுங்குக் குழியானது ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும் இரண்டு முதல் நான்கு குழிகளைக் கொண்டிருக்கும்.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?**
- ♣ துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா வகித்த உன்னதமான பாத்திரத்திற்கு நன்றி கூறவேண்டும்.
- ♣ கமால் பாட்சா அந்நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ சுல்தானியத்திற்கும் கலீபாத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.
- ♣ சோவியத்யூனியனின் ஆதரவு அவருக்குப் பேருதவியாய் அமைந்தது.

**6. ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக்காட்டுக.**

- ♣ ரஷ்யப் புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது.
- ♣ பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
- ♣ ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது.
- ♣ நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாத விசயங்கள் குறித்த விவாதங்கள் உலக அளவில் நடைபெறத் தொடங்கின.

**7. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.**

- ♣ உலக அளவில் அது உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய அரசியல் விவேகத்தின் மையமாக மாறியது.
- ♣ சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
- ♣ அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை.
- ♣ 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.

**VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.**

***1. ஏகாதிபத்தியம்***

**அ) முன்னுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

- ♣ வணிகம் முதலாளித்துவமாக மாறியது
- ♣ சந்தைகளில் மூலதனத்திற்கான இலாபத்தை தேடியது.
- ♣ சந்தையின் மீது முற்றுரிமைச் செல்வாக்கு செலுத்தியது.

**ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது?**

- ♣ பல துறைகளில் மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக மாறியது.
- ♣ தொழிற்துறையில் மிகச்சிறந்த நாடாக மாறியது.

**இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன?**

- ♣ மிகப் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு சந்தை தேவைப்பட்டது.
- ♣ பெருமளவில் கச்சாப் பொருள்கள் தேவைப்பட்டது.

**ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை?**

- ♣ அதிக அளவு வறுமை - அதிக அளவு செல்வக் குவிப்பு
- ♣ குடிசைப் பகுதிகள் - விண்ணை முட்டும் கோபுரங்கள்

***2. ஜெர்மன் பேரரசர்***

**அ) ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் இயல்பு யாது?**

- ♣ இரக்கமற்ற தன்முனைப்புக் கொண்டவர்
- ♣ ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவர்.

**ஆ) ஜெர்மனின் வன்முறைசார் தேசியம் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

- ♣ எனது நாடு சரியோ, தவறோ நான் அதை ஆதரிப்பேன்.
- ♣ ஒரு நாட்டின் மீதான பற்று, மற்றொரு நாட்டை வெறுப்பது.

**இ) மொராக்கோ விவகாரத்தில் கெய்சர் வில்லியம் தலையிட்டதேன்?**

மொராக்காவில் உள்ள அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சிடம் இழந்ததை மீட்க வில்லியம் தலையிட்டார்.

**ஈ) ஜெர்மனியின் ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு என்ன நேர்ந்தது?**

- ♣ பல ஆப்பிரிக்க காலணிகளை இங்கிலாந்து, பிரான்ஸ் பங்கிட்டுக் கொண்டன.
- ♣ சில காலணிகள் சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



### 3. பால்கன் போர்கள்

**அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?**

மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகள் 1912ஆம் ஆண்டு பால்கன் கழகத்தை உருவாக்கின.

**ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?**

- ♣ அல்பேனியா என்ற புதிய நாடு உருவானது.
- ♣ மாசிடோனியாவை ஏனைய நாடுகள் பங்கிட்டுக்கொண்டன.

**இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?**

- ♣ துருக்கி ♣ பல்கேரியா

**ஈ) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?**

புகாரெஸ்ட் உடன்படிக்கை

## VII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.**

| முதல் உலகப்போருக்கான காரணங்கள் |
|---|
| 1. ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும், எதிர்அணி சேர்க்கைகளும் |
| 2. வன்முறை சார்ந்த தேசியம் |
| 3. ஜெர்மனி பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு |
| 4. பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை |
| 5. பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு |
| 6. பால்கன் போர்கள் |
| 7. உடனடிக் காரணம் |

**1. ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும், எதிர்அணி சேர்க்கைகளும்**

- ♣ 1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ♣ ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது.
- ♣ மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.
- ♣ இங்கிலாந்து பாரசீகம், ஆப்கானிஸ்தான், திபெத் தொடர்பாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது. இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர்கூட்டு உருவாக்கப்பட்டது.

**2. வன்முறைசார்ந்த தேசியம்**

- ♣ தேசப்பற்றின் வளர்ச்சியோடு “எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்” என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.
- ♣ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று பிரான்சின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் போர்த்தன்மை கொண்ட தேசியமாக போர் வெடிப்பதற்கு தீர்மானமான பங்காற்றியது.

**3. ஜெர்மனி பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

- ♣ ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் இரக்கமற்ற தன்முனைப்புக் கொண்டவராகவும் ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார்.
- ♣ ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.
- ♣ இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதட்டம் மேலும் அதிகரித்தது.

**4. பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை**

- ♣ பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர். 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டு அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது
- ♣ மொராக்கோவில், இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.
- ♣ ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் மொராக்கோ சுல்தானின் சுதந்திரத்தை அங்கீகரித்ததோடு மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய பன்னாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கோரினார்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. **பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு**
   - ♣ 1908ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.
   - ♣ இது ஆஸ்திரியாவுக்கும் ரஷ்யாவிற்கும் பால்கன் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் வாய்ப்பினை வழங்கியது.
   - ♣ பாஸ்னியா ஹெர்சகோவினா ஆகிய இரண்டையும் ஆஸ்திரியா இணைத்துக் கொள்வதென்றும், ரஷ்யா தனது போர்க்கப்பல்களைச் சுதந்திரமாக டார்டனெல்ஸ், போஸ்பொரஸ் துறைமுகங்கள் வழியாக மத்தியதரைக்கடல் பகுதிக்குள் கொண்டு செல்லலாமென்றும் ஒப்பந்தமாயிற்று.
   - ♣ பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் ஆஸ்திரியா இணைத்துக் கொண்டது, ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு ஆதரவை நல்கியது. செர்பியாவிற்கு ரஷ்யா உதவியது,
   - ♣ ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை1914இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.
6. **பால்கன் போர்கள்**
   - ♣ துருக்கியப் பேரரசு பால்கன் பகுதியைச் சேர்ந்த துருக்கியர் மற்றும் துருக்கியர் அல்லாத பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள், பயங்கரமான படுகொலைகளில் ஈடுபட்டதும், ஆர்மீனிய இனப்படுகொலைகளும் இதற்கு ஒரு பயங்கரமான எடுத்துக்காட்டு ஆகும்.
   - ♣ கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகளிடையே பால்கன் கழகம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
   - ♣ இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912-1913) துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்து கைப்பற்றிய பகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் பிரச்சனை எழுந்தது.
   - ♣ 1913ஆம் ஆண்டு மே திங்களில் கையெழுத்தான லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
   - ♣ மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. துருக்கி, கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளாக சுருக்கப்பட்டது.
   - ♣ இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியா எளிதாகத் தோற்கடிக்கப்பட்டு புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு முடிவடைந்தது.
7. **உடனடிக் காரணம்**
   - ♣ 1914ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாள் பேரரசரின் மகனும் ஆஸ்திரிய ஹங்கேரிப் பேரரசராக இருக்கும் பிரான்ஸ் ஜோசப்பின் மைத்துனரும், வாரிசுமான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பெயரைக் கொண்ட பாஸ்னிய செர்பியனால் கொலைசெய்யப்பட்டார்.
   - ♣ ஆகஸ்டு திங்கள் முதல்நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராகப் போர்அறிவிப்பு செய்தது.
   - ♣ பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

2. **ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.**

| வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் |
|---|
| 1. இழப்பீட்டுத் தொகை வழங்குதல் |
| 2. படை வைத்துக்கொள்ள அனுமதி |
| 3. ஒருங்கிணைப்புக்கு தடை |
| 4. உரிமைகளை கட்டுப்படுத்துதல் |
| 5. உடன்படிக்கைகள் மீதான வற்புறுத்தல் |

1. **இழப்பீட்டுத் தொகை வழங்குதல்**

   போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்த ஜெர்மனி இழப்பீட்டுத் தொகையை 6600 மில்லியன் பவுண்டுகள் தர மைய நாடுகள் அனைத்திற்கும் வழங்க வலியுறுத்தப்பட்டன.
2. **படை வைத்துக்கொள்ள அனுமதி**
   - ♣ ஜெர்மன் படை 1,00,000 வீரர்களையும், சிறிய கப்பற்படையொன்றையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
   - ♣ நீர்முழ்கிக் கப்பல்களையும் ஆகாய விமானங்களையும் வைத்துக்கொள்ளக்கூடாது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. **ஒருங்கிணைப்புக்கு தடை**
   - ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.
   - ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும்.
4. **உரிமைகளை கட்டுப்படுத்துதல்**
   ஜெர்மனி கடல் கடந்த தனது காலனிகள் மீதான உரிமைகளையும் நேசநாடுகளுக்கு விட்டுக் கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது.
5. **உடன்படிக்கைகள் மீதான வற்புறுத்தல்**
   - ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
   - ஜெர்மனியின் அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

2. **லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**
   - 1907ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.
   - டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.
   - நவம்பர் திங்கள் 7ஆம் நாள் முக்கியமான அரசுக் கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத் தொழிலாளர்களாலும், புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன.
   - 1917ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.
   - போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப் பெயரிடப்பெற்றது.

3. **சர்வதேச சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.**
   - **சங்கத்தின் செயல்பாடுகள்**
     - 1920-1925 ஆகிய ஆண்டுகளிடையே சர்வதேச சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.
     - 1920ஆம் ஆண்டில் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.
     - 1921ல் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலீசயிம் பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது.
     - மூன்றாவது பிரச்சனை கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது சர்வதேசசங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
   - **தோல்விக்கான காரணங்கள்**
     - சர்வதேச சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் ஐரோப்பிய அரசியல் மையமாக மாறியது.
     - அரசியல் பிரச்சனைகளில் சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர்கள் அனைவரின் ஏகோபித்த ஆதரவு இல்லாமல்போனது.
     - சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.
     - அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை.
     - சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தல், அமெரிக்கா சங்கத்தில் உறுப்பினராக இல்லாததும் தோல்விக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

# 2. இரு உலகப் போர்களுக்கு இடையில் உலகம்

## புத்தக வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா **இ) போப்** ஈ) ஸ்பெயின்
2. யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
**அ) ஹெர்மன் கோர்ட்ஸ்** ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?
அ) ஆங்கிலேயர் **ஆ) ஸ்பானியர்** இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்
4. லத்தீன் அமெரிக்காவுடன் "நல்ல அண்டை வீட்டுக்காரன்" எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
**அ) ரூஸ்வெல்ட்** ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் விவேகத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா **ஆ) லத்தீன் அமெரிக்கா** இ) இந்தியா ஈ) சீனா
6. தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்?
**அ) வெர்வோர்டு** ஆ) ஸ்மட்ஸ் இ) ஹெர்சாக் ஈ) போதா
7. தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது?
அ) அமெரிக்க அளித்த உதவி **ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்**
இ) சைமன் பொலிவரின் பங்கேற்பு ஈ) பிரெஞ்சுப் புரட்சி
8. லத்தீன் அமெரிக்க விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக மன்றோ கொள்கையில் திருத்தம் கொண்டு வந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
**அ) தியோடர் ரூஸ்வெல்ட்** ஆ) ட்ருமென இ) ஐசனோவா ஈ) உட்ரோ வில்சன

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சமூக ஜனநாயக கட்சியை நிறுவியர் ***பெர்டினான்ட்லாஸ்ஸல்லி***
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ***ஜோசப் கோயபெல்ஸ்***
3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ***1927***இல் நிறுவப்பட்டது.
4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ***கெஸ்டபோ*** என அழைக்கப்பட்டது.
5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் ***1910*** ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
6. ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ***27*** ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
7. ***அஸ்டெக்குகள்*** ஒரு ராணுவ நாடாகும்.
8. போயர்கள் ***ஆப்பிரிக்கநேர்கள்*** என்றும் அழைக்கப்பட்டனர்.

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.**

1. i) முதல் உலகப்போரின்போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபடவைப்பதே இத்தாலியின் முக்கியக்கடமையாக இருந்தது-
ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.
iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.
iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.


Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

அ) i, ii ஆகியவை சரி **ஆ) i, iii சரி**
இ) iii, iv ஆகியவை சரி ஈ) i, ii, iii ஆகியவை சரி

2. **கூற்று** : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.
**காரணம்:** அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.
***அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி***
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. **கூற்று** : 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
**காரணம்** : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.
***அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி***
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான காரணமல்ல
இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

## IV. பொருத்துக.

1. டிரான்ஸ்வால் - அ) ஜெர்மனி
2. டோங்கிங் - ஆ) ஹிட்லர்
3. ஹிண்டன்பர்க் - இ) இத்தாலி
4. மூன்றாம் ரெய்க் - ஈ) தங்கம்
5. மாட்டியோட்டி - உ) கொரில்லா நடவடிக்கைகள்

| விடைகள்: | 1 - ஈ | 2 - உ | 3 - அ | 4 - ஆ | 5 - இ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. இந்தோ- சீனாவில் நடைபெற்ற “வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**
- ♣ 1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப் புரட்சி செய்தனர்.
- ♣ பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது.
- ♣ இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது.
- ♣ இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ‘வெள்ளை பயங்கரம்’ (White Terror) என்பது அரங்கேறியது.
- ♣ இதில் புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

**2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்தும் குறித்து விவாதிக்கவும்.**
- ♣ இங்கிலாந்து பெருமந்தத்தின் தீயவிளைவுகளைத் தனது காலனிய நாடுகளுக்கு மாற்ற நடத்தப்பட்ட உச்சி மாநாடு இதுவாகும்.
- ♣ இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
- ♣ இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக் கொண்டன.

**3. மன்றோ கோட்பாட்டை விளக்குக.**
- ♣ தென் ஆப்பிரிக்கக் காலனிகளின் புரட்சிகளை ஒடுக்க அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மன்றோ தனது புகழ் பெற்ற மன்றோ கோட்பாட்டை முன்வைத்தார்.
- ♣ அமெரிக்காவின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ, ஐரோப்பியர்கள் தலையீட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கெதிரான போராகக் கருதப்படும் என அறிவித்தது.


www.Padasalai.Net www.TrbTnpsc.com
Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ இப்பயமுறுத்தல் ஐரோப்பியர்களை அச்சங்கொள்ள வைத்து அவர்களை தென் அமெரிக்க விவகாரங்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது.
- ♣ இவ்வாறாக மன்றோ கோட்பாடு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து அமெரிக்கா, தென் அமெரிக்க குடியரசுகளைக் காப்பாற்றியது.

**4. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?**

- ♣ 1922 அக்டோபரில் ஒரு நீண்ட அமைச்சரவை சிக்கலின்போது முசோலினி பாசிஸ்டுகளின் ரோமாபுரியை நோக்கிய மாபெரும் அணிவகுப்பு ஒன்றை நடத்தினார்.
- ♣ முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.
- ♣ மக்களாட்சிக்கட்சியின் ஒருங்கிணைக்க முடியாத தன்மையும் உறுதியுடன் செயல்பட முடியாத இயலாமையும் முசோலினியின் வெற்றிக்கு உதவின.

**5. 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.**

- ♣ 1884-1885 ஆண்டுகளில் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.
- ♣ ஆனால் ஆங்கிலேயருக்கும் தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்றப் போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

**6. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?**

- ♣ பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரணஅடியைக் கொடுத்தது.
- ♣ வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
- ♣ விவசாயி, நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை.
- ♣ விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.
- ♣ இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காக தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.
- ♣ விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத்தூண்டியது.

**7. ஸ்மட்ஸ் - ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணங்களை விளக்குக.**

- ♣ தென்னாப்பிரிக்கா டொமினியன் தகுதியைப் பெற்றுவிட்டதால் அயலுறவுக் கொள்கையின் மீது முழுமையானக் கட்டுப்பாட்டைப் பெற்றது.
- ♣ உலகப் பொருளாதார பெருமந்தம் தென் ஆப்பிரிக்காவிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடனைத் தீர்க்க வகையற்ற நிலையையும் ஏற்படுத்தியது.
- ♣ இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர் இயக்கம் தேசியக் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக்கொண்டது.
- ♣ நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்துவைக்க ஒரு கூட்டணி அரசு தேவையென ஸ்மட்ஸ் நம்பினார்.
- ♣ ஆகவே 1934இல் தென் ஆப்பிரிக்கக்கட்சியும் தேசியக்கட்சியும் இணைந்து ஐக்கிய தென்னாப்பிரிக்க தேசியக்கட்சி அல்லது ஐக்கிய கட்சியாக உருவானது.

**8. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.**

- ♣ டாலர் என்ற சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதற்காக அமெரிக்கா பின்பற்றியக் கொள்கை ஆகும்.
- ♣ இதன் மூலம் அந்த நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பயன்படுத்தியது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**VI. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

***1. இந்தோ-சீனாவின் காலனிய எதிர்ப்புப் போராட்டம்***

**அ) காலனியாதிக்க நீக்கம் எனும் கோட்பாட்டைத் தெளிவுபட விளக்குக.**

இந்தோ சீனாவின் பெரும்பாலான செல்வங்கள் காலனியாதிக்க சக்திக்கே பயன்படுவதை உணர்ந்து 1916இல் காலணியாதிக்க நீக்க எதிர்ப்பு புரட்சி நடைபெற்றது.

**ஆ) இந்தோ- சீனாவை உருவாக்கிய மூன்று நாடுகள் எவை?**

கம்போடியா - லாவோஸ் - வியட்நாம்

**இ) காலனியாதிக்க எதிர்ப்புணர்வுகள் வளர்வதற்கு கம்யூனிச சிந்தனைகள் எவ்வாறு உதவின?**

- ♣ இந்தோ சீனர்களின் கம்யூனிச சிந்தனைகள் முதலாளித்துவ கோட்பாட்டை எதிர்த்தது.
- ♣ கம்யூனிச சமதர்மக் கொள்கை காலனியாதிக்க எதிர்ப்புக்கு உதவியது

**ஈ) இந்தோ- சீனாவின் மைய நீரோட்ட அரசியல் கட்சி எது?**

வியட்நாம் தேசியக் கட்சி

***2. ஹோ சி மின்***

**அ) ஹோ சி மின் எங்கே பிறந்தார்?**

டோங்கிங்

**ஆ) ஹோ சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?**

விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம் என்னும் சிற்றேடு இவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதியாக ஆக்கியது.

**இ) ஹோ சி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?**

1925 இல்' புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பு அமெரிக்காவிற்கு எதிராகப் போருக்குத் தயாரானது

**ஈ) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ- சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி

***3. தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்***

**அ) ஒட்டு மொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது?**

1830

**ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?**

ஐந்து

**இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?**

1898 - 1902

**ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?**

செல்வாக்கு மிக்க சில நபர்களின் அழுத்தம், இராணுவக் குழுக்கள், பணம் படைத்தவர்களின் விருப்ப ஆட்சி

**VII. விரிவான விடையளிக்கவும்.**

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

- ♣ 1919 ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, மியூனிச் நகரில் சந்தித்து தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக நாசிசக் கட்சியை நிறுவியது. ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
- ♣ அவர் வன்முறை சார் அரசியலை, குறிப்பாக யூதர்களுக்கு எதிராக வளர்த்தார். மேலும் அவர் ஜூடாயிசத்தையும் மார்க்ஸியத்தையும் இணைத்துப் பார்த்தார்.
- ♣ முதல் உலகப்போரின் போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
- ♣ அவரின் ஆற்றல் மிக்க உரை வீரர்களைத் தட்டி எழுப்பியது.
- ♣ 1923 ஆம் ஆண்டு பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சியை மேற்கொண்டார்.
- ♣ மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட முழுவளர்ச்சியில்லா தேசியப் புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ சிறையில் இருந்தபோது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான மெயின் காம்ப் - எனது போராட்டம் எனும் நூலை எழுதினார்.
- ♣ 1932 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர்.
- ♣ முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்கத் தொடங்கினர்.
- ♣ இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

**2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

| இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் |
|---|
| 1. மாகாணங்களில் இரட்டையாட்சி - 1919 |
| 2. பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா - 1929 |
| 3. அந்நியச் செலாவணி மாற்றுக்கொள்கை |
| 4. இந்தியாவேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம் |
| 5. 1935ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் |

**1. மாகாணங்களில் இரட்டையாட்சி - 1919**

- ♣ இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1905 இல் சுதேசி இயக்கத்தோடு துவங்கியது.
- ♣ 1919இல் இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது. அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்ட சபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ்வரும் சில துறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.
- ♣ மாண்டேகு அறிவிப்பு கூறுவதாவது: "ஆங்கிலப்பேரரசின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இந்தியாவின் நிர்வாகத்தில் அதிகப்படியான இந்தியர்கள் பங்கேற்கும் ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக சுயாட்சி வளர்ச்சி பெறும்".
- ♣ இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு சட்ட சபைகளைப் புறக்கணிக்கவும் முடிவு செய்தது.

**2. பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா - 1929**

- ♣ 1929 ஆம் ஆண்டுப் பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேயே வணிக வர்த்தக நடவடிக்கைகளில் அந்நிய முதலீடு குறிப்பாக இருப்புப்பாதை அமைப்பது போன்ற கனரகதொழில் துறைகளில் குறைந்தது.
- ♣ வணிகத்துறையின் விரிவாக்கத்தில் மறைமுக வரிகளான சுங்க வரிகள் அயல் நாட்டுப் பணத்தையும் பெறுவதற்கான எளிய வழியாகும்.
- ♣ இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இந்திய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக் கொண்டன.
- ♣ வரவு செலவுக் கணக்குகளைச் சமன்படுத்தும் கொள்கையைப் பின்பற்ற இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டது.
- ♣ பெருமந்த காலத்தில் அந்நியநாட்டுச் செலாவணிகளை பெறும் பொருட்டு ஆங்கிலேய-இந்திய அரசு சுங்கவரிகளை அதிகரித்தது.
- ♣ நெருக்கடியான நேரங்களில் இங்கிலாந்திற்குத் தேவைப்பட்ட தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியானது.

**3. அந்நியச் செலாவணி மாற்றுக்கொள்கை**

- ♣ இந்தியக்காகிதப் பணத்தின் மதிப்பைக் கூட்டியதன் மூலம் ஆங்கிலேயர்கள் இறக்குமதியை மலிவாக்கினர்.
- ♣ இந்திய அரசு பின்பற்றிய அந்நியச் செலாவணி மாற்றுக் கொள்கை காலனி அரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலையை ஏற்படுத்தியதோடு ஆங்கில அரசுக்கு எதிரான அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. **இந்தியாவேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம்**
   - ♣ பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
   - ♣ விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.
   - ♣ இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காக தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.
   - ♣ விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.
   - ♣ 1930களில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு போராடும் குணம் மிக்க மாபெரும் மக்கள் இயக்கமாக எழுச்சி பெற்றது. சட்டமறுப்பு இயக்கத்தில் அனைவரும் சேருமாறு காங்கிரஸ் விடுத்த அழைப்பு கிராமப்புற இந்தியாவில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது. இடதுசாரித் தீவிரவாதத்தையும் நன்றாகவே காணமுடிந்தது.

5. **1935ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம்**
   - ♣ ஆங்கிலேயர்களுக்கு இந்திய தேசியவாதிகளைச் சமாதானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது.
   - ♣ அதன் வெளிப்பாடே 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம். உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
   - ♣ இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.
   - ♣ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அமைச்சரவைகளை கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

3. **தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.**

| தென்னாப்பிரிக்காவில் தேசிய அரசியலில் எழுச்சி மற்றும் வளர்ச்சி |
|---|
| 1. தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயம் |
| 2. தென் ஆப்பிரிக்க கட்சி |
| 3. ஹெர்சாக்கின் தலைமையில் தேசியக்கட்சி |
| 4. கறுப்பின மக்களுக்கு எதிரான இனக்கொள்கைகள் |
| 5. தென்னாப்பிரிக்காவுக்கு டொமினியன் அந்தஸ்து |
| 6. தென்னாப்பிரிக்கா: முதல் உலகப்போரின் போதும் அதற்குப் பின்னரும் |

1. **தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயம்**

   1909இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தென்னாப்பிரிக்கச் சட்டம் கேப் டவுனில் ஒன்றியப் பாராளுமன்றத்தை அமைத்து 1910ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமானது.

2. **தென் ஆப்பிரிக்க கட்சி**

   தென்னாப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன. அவை பெரும்பாலும் ஆங்கிலேயர்களைக் கொண்ட யூனியனிஸ்ட் கட்சி, ஆப்பிரிக்க நேர்ஸ் என்றழைக்கப்பட்ட போயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த தென் ஆப்பிரிக்கக்கட்சியாகும்.

3. **ஹெர்சாக்கின் தலைமையில் தேசியக்கட்சி**
   - ♣ முதல் பிரதமமந்திரியான போதா, தென் ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.
   - ♣ ஆனால் தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போராடும் குணமிக்க ஒரு பிரிவினர் ஹெர்சாக் என்பவரின் தலைமையின் கீழ் தேசியக்கட்சி எனும் கட்சியைத் தொடங்கினர்
   - ♣ ஹெர்சாக் இரட்டை மேலாதிக்கக் கொள்கையைப் பின்பற்ற விரும்பினார்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

- ♣ 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சி நாற்பத்து நான்கு இடங்களைக் கைப்பற்றியது. தென்னாப்பிரிக்கக்கட்சி ஸ்மட்ஸ் என்பாரின் தலைமையில் 41 இடங்களில் வெற்றி பெற்றது.
- ♣ ஆங்கிலேயர் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது.
- ♣ போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்க நேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக் கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மைபெற்றார்.

**4. கறுப்பின மக்களுக்கு எதிரான இனக்கொள்கை**

- ♣ ஆப்பிரிக்கநேர்கள் கறுப்பின மக்களுக்கும் சிறுபான்மை இந்தியர்களுக்கும் எதிராக கடுமையான இனக்கொள்கையைப் பின்பற்றினர்.
- ♣ கறுப்பின மக்களின் குடியிருப்புகளை நகரங்களின் சில குறிப்பிட்ட பகுதிகளுக்குள்ளாகக் கட்டுப்படுத்துவதற்காக 1923இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.
- ♣ 1913 இல் இயற்றப்பட்ட சட்டம் வெள்ளை மற்றும் கறுப்பின விவசாயிகளைப் பிரித்து வைத்தது.
- ♣ 1924இல் இயற்றப்பட்ட சட்டம் கறுப்பின மக்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதிலிருந்தும் தொழிற்சங்கத்தில் சேருவதில் இருந்தும் தடுத்தது.
- ♣ மாநிலத்தில் கறுப்பின மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.
- ♣ இவ்வாறு மண்ணின் மைந்தர்களான கறுப்பின மக்கள் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு அவர்களை அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் துன்புற்றனர்.

**5. தென்னாப்பிரிக்காவுக்கு டொமினியன் அந்தஸ்து**

- ♣ தென்னாப்பிரிக்கா டொமினியன் தகுதியைப் பெற்றுவிட்டதால் அயலுறவுக் கொள்கையின் மீது முழுமையானக் கட்டுப்பாட்டைப் பெற்றது.
- ♣ உலகப் பொருளாதார பெருமந்தம் தென் ஆப்பிரிக்காவிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடனைத் தீர்க்க வகையற்ற நிலையையும் ஏற்படுத்தியது. இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர் இயக்கம் தேசியக் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டது.
- ♣ நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க ஒரு கூட்டணியரசு தேவையென ஸ்மட்ஸ் நம்பினார். ஆகவே 1934இல் தென் ஆப்பிரிக்கக்கட்சியும் தேசியக்கட்சியும் இணைந்து ஐக்கிய தென்னாப்பிரிக்க தேசியக்கட்சி அல்லது ஐக்கிய கட்சி உருவானது.

**6. தென்னாப்பிரிக்கா: முதல் உலகப்போரின் போதும் அதற்குப் பின்னரும்**

- ♣ இரண்டாம் உலகப்போர் வெடித்தபோது ஜெர்மனிக்கு எதிராக இங்கிலாந்தை ஆதரிப்பது எனும் விசயத்தில் யுனைடெட் கட்சியில் பிளவு ஏற்பட்டது.
- ♣ நாசிசத்தை எதிர்த்த ஸ்மட்ஸ் தென்ஆப்பிரிக்கா இங்கிலாந்திற்கு உதவவேண்டும் என விரும்பினார்.
- ♣ ஹிட்லரிடம் பரிவு கொண்ட ஹெர்சாக் நடுநிலைக் கொள்கையை கடைபிடிக்க விரும்பினார்.
- ♣ பாராளுமன்றம் போரில் பங்கேற்பது என முடிவு செய்ததால் ஹெர்சாக் பதவி விலகினார். ஸ்மட்ஸ் 1948 வரை பிரதமராகத் தொடர்ந்து பணியாற்றினார். .
- ♣ நேசநாடுகளின் வெற்றியைத் தொடர்ந்து 1948ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணி அரசு பெரும் வெற்றி பெற்றது. ஹெர்சாக் இயற்கை எய்திய பின்னர் அவர் தலைமையேற்றக் கட்சியிலிருந்து பலர் தேசியவாதக் கட்சியில் சேர்ந்தனர்.
- ♣ 1948ஆம் ஆண்டு தேர்தலில் பிரிந்து கிடந்த யுனைடெட் கட்சியைக் காட்டிலும், மீண்டும் இணைந்த தேசியவாதக் கட்சி பெரும்பான்மையிடங்களைப் பெற்றது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 1. இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்.....................
   அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ ***இ) 3214 கி.மீ*** ஈ) 2814 கி.மீ.
2. இந்தியாவின் தென்கோடி முனை .....................
   அ) அந்தமான் ஆ) கன்னியாகுமரி ***இ) இந்திராமுனை*** ஈ) காவரட்தி
3. இமயமலையின் கிழக்கு - மேற்கு பரவல்
   ***அ) 2500 கி.மீ*** ஆ) 2400 கி.மீ இ) 800 கி.மீ ஈ) 2200 கி.மீ
4. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு .....................
   அ) நர்மதா ஆ) கோதாவரி ***இ) கோசி*** ஈ) தாமோதர்
5. தக்காண பீடபூமியின் பரப்பளவு .....................சதுர கி.மீ ஆகும்.
   அ) 6 லட்சம் ஆ) 8 லட்சம் இ) 5 லட்சம் ***ஈ) 7 லட்சம்***
6. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ..................... என அழைக்கப்படுகிறது.
   அ) கடற்கரை ***ஆ) தீபகற்பம்*** இ) தீவு ஈ) நீர்ச்சந்தி
7. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா .....................ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
   அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் ***இ) ஸ்ரீலங்கா*** ஈ) மாலத்தீவு
8. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் .....................
   அ) ஊட்டி ***ஆ) ஆனை முடி*** இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா
9. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி .....................
   அ) பாபர் ஆ) தராய் ***இ) பாங்கர்*** ஈ) காதர்
10. பழவேற்காடு ஏரி ..................... மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
    அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
    இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ***ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்***

### II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. சாங்போ | - | அ) கங்கை ஆற்றின் துணை ஆறு |
| 2. யமுனை | - | ஆ) இந்தியாவின் உயர்ந்த சிகரம் |
| 3. புதிய வண்டல் படிவுகள் | - | இ) பிரம்மபுத்ரா |
| 4. காட்வின் ஆஸ்டின் (K2) | - | ஈ) தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி |
| 5. சோழ மண்டலக்கடற்கரை | - | உ) காதர் |

| விடைகள்: | 1 - இ | 2 - அ | 3 - உ | 4 - ஆ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

### III. காரணம் கூறுக.

**1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.**

- ♣ இமய மலைகள் சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் உருவாகியவை.
- ♣ இமய மலைகள் பேரிக்க விசையின் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு, மடிப்பு மலைகளாக உருவாகின.

**2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்**

- ♣ வட இந்திய ஆறுகள் இமய மலையில் பனி உறைந்த மலைகளில் உருவாகின்றன.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ இந்த ஆறுகள் பரும மழைகளிலிருந்தும் பனி உருகுவதாலும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகள் எனப்படுகின்றன.

**3. சோட்டா நாகபுரி பீடபூமி கனிம வளம் நிறைந்தது.**

- ♣ சோட்டா நாகபுரி பீடபூமி தீப்பாறை மற்றும் உருமாறிய பாறைகளால் ஆனது.
- ♣ இப்பகுதி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிம வளத்திற்கு புகழ் பெற்றது.
- ♣ இது கனிம வளங்களின் சேமிப்பு பெட்டகம் என்றும் அழைக்கப்படுகிறது.

**4. இந்திய பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.**

- ♣ மருஸ்தலி என்பதற்கு 'இறந்த நிலம்' என்பது பொருள்.
- ♣ தார் பாலைவனத்தின் கிழக்குப் பகுதியில் மணல் குன்றுகள் நிறைந்துள்ளன.
- ♣ இம்மணல் குன்றுகள் நகரும் தன்மை கொண்டதால் குடியிருப்புகள், வேளாண் நிலங்கள் போன்றவை இப்பெரும் மணல் குன்றுகளால் மூடப்படும் அபாயம் உள்ளது.
- ♣ போக்குவரத்தும் தடுக்கப்படுவதால் இந்தியப் பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகின்றன.

**5. வடக்கு கிழக்கு மாநிலங்கள் "ஏழு சகோதரிகள்" என அழைக்கப்படுகின்றன**

வடகிழக்கு மாநிலங்களுக்கிடையே இன மற்றும் மத வேறுபாடு இருந்தாலும் அவற்றிற்கிடையே புவி தோற்றங்கள், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளுக்கிடையே ஒற்றுமை காணப்படுவதால் அவை ஏழு சகோதரிகள் என அழைக்கப்படுகின்றன.

**6. கோதாவரி ஆறு விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது.**

வட இந்தியாவில் கங்கை ஆற்றினைப் போல தீபகற்ப இந்தியாவில் கோதாவரி ஆறு மிக நீளமாகவும், அதிகப் பரப்பளவு வடிநிலங்களையும் கொண்டதால் இது விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது.

## IV. வேறுபடுத்துக

**1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்**

| 1. | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| அ) | இவ்வாறுகள் வட இந்தியாவில் பாய்கின்றன. | இவ்வாறுகள் தென் இந்தியாவில் பாய்கின்றன. |
| ஆ) | இவ்வாறுகள் இமய மலையில் உற்பத்தியாகின்றன. | இவ்வாறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. |
| இ) | இவை வற்றாத ஜீவ நதிகள் என அழைக்கப்படுகின்றன. | இவை வற்றும் நதிகள் என அழைக்கப்படுகின்றன. |
| ஈ) | இவ்வாறுகளால் நீர்மின் உற்பத்தி செய்ய முடியாது. | இவ்வாறுகளால் நீர்மின் உற்பத்தி செய்ய முடிகிறது. |
| உ) | நீர் வழிப் போக்குவரத்து நடைபெறுகிறது. | நீர் வழிப் போக்குவரத்து நடைபெறுவதில்லை. |

**2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்**

| 2. | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| அ) | இவை மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. | இவை கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |
| ஆ) | இம்மலையின் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது. | இம்மலை பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது. |
| இ) | இதன் உயரமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச்செல்ல அதிகரிக்கிறது. | இதன் உயரமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச்செல்ல அதிகரிப்பதில்லை. |
| ஈ) | மலை வாழிடமான கொடைக்கானல் பழனி மலையில் அமைந்துள்ளது. | மலை வாழிடமான ஏற்காடு, ஏலகிரி மலையில் அமைந்துள்ளது. |



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

3. இமாத்ரி மற்றும் இமாச்சல்

| 3. | இமாத்ரி | இமாச்சல் |
|---|---|---|
| அ) | இதன் சராசரி அகலம் 25 கி.மீ ஆகும். | இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும். |
| ஆ) | இதன் சராசரி உயரம் 2000 மீ. | இதன் சராசரி உயரம் 3500 மீ முதல் 4500 மீ வரை வேறுபடுகிறது. |
| இ) | குறைவான மழையைப் பெறுகின்றது. | மிக அதிக மழைப்பொழிவு ஏற்படுகிறது. |
| ஈ) | இம்மலைத்தொடரில் காணப்படும் மலைகள் கஞ்சன் ஜங்கா, எவரெஸ்ட். | இம்மலைத்தொடரில் காணப்படும் மலைகள் பீர்பாஞ்சல், தவ்லதார், மற்றும் மகாபாரத். |
| உ) | இங்கு கங்கோத்ரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன. | சிம்லா, முசெளரி, நைனிடால், டார்ஜிலிங் போன்ற கோடை வாழிடங்கள் இங்கு அமைந்துள்ளன. |

4. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி

| 4. | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| அ) | மேற்கு கடற்கரைச் சமவெளி, மேற்கு தொடர்ச்சி மலைக்கும், அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. | கிழக்கு கடற்கரைச் சமவெளி, கிழக்கு தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது. |
| ஆ) | வடக்கில் ரானாப் கட்ச் முதல் கன்னியாக்குமரி வரை நீண்டுள்ளது. | வடக்கில் மேற்கு வங்காளத்திலிருந்து கன்னியாக்குமரி வரை நீண்டுள்ளது. |
| இ) | இச்சமவெளி மணற்கடற்கரை, கடற்கரை மணல் குன்றுகள், கழிமுகங்கள், காயல்கள் போன்ற நிலத்தோற்றங்களை கொண்டுள்ளது. | இச்சமவெளி வண்டல் படிவுகளாலும், கடற்கரைகளையும் கொண்டுள்ளது. |
| ஈ) | இதன் வடப்பகுதியில் கொங்கன் கடற்கரை அமைந்துள்ளது. | இதன் வடப்பகுதியில் வடசர்க்கார் அமைந்துள்ளது. |
| உ) | இதன் தென் பகுதியில் மலபார் கடற்கரை அமைந்துள்ளது. | இதன் தென் பகுதியில் சோழ மண்டல கடற்கரை அமைந்துள்ளது. |
| ஊ) | வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள முக்கிய ஏரியாகும். | சில்கா ஏரி இப்பகுதியில் உள்ள முக்கிய ஏரியாகும். |

## V. சுருக்கமாக விடையளி

**1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.**

- ♣ மேற்கில் - பாகிஸ்தான்
- ♣ வட மேற்கில் - ஆப்கானிஸ்தான்
- ♣ வடக்கில் - சீனா, நேபாளம், பூடான்
- ♣ கிழக்கில் - வங்காள தேசம் மற்றும் மியான்மர்
- ♣ தெற்கில் - இலங்கை

**2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.**

- ♣ இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
- ♣ இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்க ரேகையான 82° 30' கிழக்கு தீர்க்கரேகையின் தலநேரம், இந்திய திட்ட நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- ♣ இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாக செல்கிறது.
- ♣ இந்திய திட்டநேரமானது கீரீன்வீச் சராசரி நேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

**3. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.**

- ♣ தக்காண பீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ வடமேற்கு திசையில் விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும், வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாக கொண்டது.
- ♣ சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500 மீ முதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

**4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.**

♣ நர்மதை ♣ தபதி ♣ மாஹி

**5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.**

- ♣ இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது.
- ♣ இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும்.
- ♣ இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும்.
- ♣ இலட்சத்தீவுக்கூட்டங்களை 8° கால்வாய் மாலத்தீவிலிருந்து பிரிக்கிறது.
- ♣ இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது.
- ♣ இலட்சத்தீவு, மினிக்காய் மற்றும் அமினித் தீவு கூட்டங்களை 1973 ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

**1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.**

**➲ இமயமலையின் உட்பிரிவுகள்:**

- ♣ ட்ரான்ஸ் இமயமலைகள்
- ♣ மத்திய இமய மலைகள்
- ♣ கிழக்கு இமயமலை / பூர்வாஞ்சல் குன்றுகள்

மத்திய இமயமலை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- ♣ 1. இமாத்ரி - பெரிய இமயமலை
- ♣ 2. இமாச்சல் - சிறிய இமயமலை
- ♣ 3. சிவாலிக் - வெளி இமயமலை

**➲ இமயமலையின் முக்கியத்துவம்:**

- ♣ தென்மேற்கு பருவக் காற்றைத் தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.
- ♣ இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- ♣ வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (எ.கா) சிந்து, கங்கை, பிரம்புத்திரா மற்றும் பிற ஆறுகள்.
- ♣ இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
- ♣ பல கோடை வாழிடங்களும், புனித தலங்களான அமர்நாத், கேதர்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
- ♣ வனப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.
- ♣ மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.
- ♣ இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

**2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

**➲ தீபகற்ப ஆறுகள்**

- ♣ தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.
- ♣ பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
- ♣ இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ நீரின் அளவு மழைப் பொழிவிற்கு ஏற்றாற்போல் மாறுபடுகிறது.
- ♣ இவ்வாறுகள் செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே பாய்கிறது.
- ♣ தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
  1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

| 1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் |
|---|
| அ) மகாநதி |
| ஆ) கோதாவரி |
| இ) கிருஷ்ணா |
| ஈ) காவேரி |

**அ) மகாநதி**

- ♣ இந்நதி சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் மாவட்டத்திலுள்ள சிகாவிற்கு அருகில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக சுமார் 851 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- ♣ சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, கெங்குட்டி மற்றும் நன் ஆகியவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.
- ♣ மகாநதி பல கிளையாறுகளாகப் பிரிந்து இந்தியாவின் மிகப் பெரிய டெல்டாக்களை உருவாக்குகிறது.
- ♣ இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஆ) கோதாவரி**

- ♣ தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறான (1465 கி.மீ) கோதாவரி, மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- ♣ இந்நதி விருத்தகங்கா எனவும் அழைக்கப்படுகிறது.
- ♣ இது 3.13 இலட்சம் சதுர.கி.மீ பரப்பளவு வடிநிலத்தைக் கொண்டது.
- ♣ இது ஆந்திரப்பிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**இ) கிருஷ்ணா**

- ♣ மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மகா பலேஷ்வர் என்ற பகுதியில் ஊற்றாக உருவாகி சுமார் 1400 கி.மீ நீளம் வரையும் 2.58 இலட்சம் ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டிருக்கிறது.
- ♣ இது தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதியாகும்.
- ♣ கொய்னா, பீமா, முசி, துங்கபத்ரா மற்றும் பெடவாறு போன்றனவ இவ்வாற்றின் முக்கிய துணையாறுகளாகும்.
- ♣ இந்நதி ஆந்திரப்பிரதேசத்தின் வழியாக பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**ஈ) காவேரி**

- ♣ காவேரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகி சுமார் 800 கி.மீ நீளத்துகக் பாய்கிறது.
- ♣ இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- ♣ ஹரங்கி, ஹேமாவதி, கபினி, பவானி, அர்காவதி, நொய்யல், அமராவதி ஆகியவை காவிரியின் துனை ஆறுகளாகும்.
- ♣ தமிழ்நாட்டில் ஒகேனக்கல் என்ற இடத்தில் நீர் வீழ்ச்சியாக பாய்கிறது.
- ♣ இறுதியில் பூம்புகார் என்ற இடத்திற்கு அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

| 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் |
|---|
| அ) நர்மதை |
| ஆ) தபதி |

**அ) நர்மதை**

- ♣ மத்திய பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் 1057 மீ உயரத்தில் உற்பத்தியாகி 1312 கி.மீ நீளத்தையும் 98796 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தையும் கொண்ட தீபகற்ப இந்தியாவில் மேற்கு நோக்கி பாயும் நதியாகும்.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.
- ♣ இது மேற்கு நோக்கி பாயும் ஆறுகளில் நீளமானதாகும்.
- ♣ பர்னா, ஹலுன், ஹெரன், பஞ்சர், தூதி, சக்கார், டவா, மற்றும் கோலர் ஆகியவை இதன் முக்கிய துணையாறுகள் ஆகும்.

**ஆ) தபதி**

- ♣ தபதி ஆறு 724 கி.மீ நீளத்தையும் 65145 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தையும் கொண்டது.
- ♣ இந்நதி மத்திய பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 752 மீ உயரத்தில் முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது.
- ♣ பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- ♣ தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை, தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பாய்கின்றன.
- ♣ வாகி, கோமை, அருணாவதி, அனேர், நீசு, புரே, பஞ்சரா மற்றும் போரி ஆகியன தபதி ஆற்றின் துணை ஆறுகள் ஆகும்.

**3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.**

- ♣ கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாயும் இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும்.
- ♣ கங்கை சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளன.
- ♣ கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- ♣ இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும்.
- ♣ வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டாக், கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- ♣ வங்கதேசத்தில், கங்கை பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- ♣ கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப் பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 1. இந்திய அரசியலமைப்பு

## புத்தக வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?
   அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
   ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக
   இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக
   ***ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு***

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
   ***அ) ஒரு முறை*** ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை

3. இந்திய அரசியலமைப்பு, தனது குடிமக்களுக்கு எந்த வகை குடியுரிமையை வழங்குகிறது?
   அ) இரட்டை குடியுரிமை
   ***ஆ) ஒற்றை குடியுரிமை***
   இ) சில மாநிலங்களில் ஒற்றை குடியுரிமை மற்ற மாநிலங்களில் இரட்டை குடியுரிமை
   ஈ) மேற்கண்டவைகளில் எதுவுமில்லை

4. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
   அ) வம்சாவளி ஆ) பதிவு ***இ) இயல்புரிமை*** ஈ) மேற்கண்ட அனைத்தும்

5. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
   அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
   ***இ) சொத்துரிமை*** ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

6. கீழ்க்காண்பவற்றில் ஒன்று அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.
   அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
   ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
   இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
   ***ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துக்கள் அவர்களது பிள்ளைகளுக்கு செல்லுதல்***

7. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் ……..ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமையைப் பெறலாம்.
   அ) பாராளுமன்றம் ஆ) தலைமை வழக்குரைஞர்
   இ) இந்தியக் குடியரசு தலைவர் ***ஈ) இந்திய உச்ச நீதிமன்றம்***

8. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?
   அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
   ***இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை*** ஈ) சொத்துரிமை

9. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?
   அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
   ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
   ***இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்***
   ஈ) மேற்கண்ட அனைத்தும்

10. நமது அடிப்படை கடமைகளை ……….இடமிருந்து பெற்றோம்
    அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
    ***இ) ரஷ்யா அரசியலமைப்பு*** ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

11. வழிகாட்டும் நெறிமுறைகள் எம்முறையில் வகைப்படுத்தப்படுகின்றன?
    அ) தாராளவாதம் மற்றும் கம்யூனிச கொள்கைகள்
    ஆ) சமதர்ம மற்றும் கம்யூனிச கொள்கைகள்



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இ) தாராளவாதம், காந்திய மற்றும் கம்யூனிச கொள்கைகள்
***ஈ) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்***

12. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
அ) பிரிவு 352 ஆ) பிரிவு 356 ***இ) பிரிவு 360*** ஈ) பிரிவு 368

13. இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தும் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?
அ) பிரிவு 352 ஆ) பிரிவு 356 இ) பிரிவு 360 ***ஈ) பிரிவு 368***

14. எந்த குழுக்கள் / கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
அ) 1, 2 & 3 ***ஆ) 1 & 2*** இ) 1 & 3 ஈ) 2 & 3

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ***அமெரிக்காவில்*** தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக **Dr. *சச்சிதானந்த சின்கா*** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ***1949 ஆம் ஆண்டு நவம்பர் 26***
4. ***ஐந்து*** பேராணைகள் பிரிவு 32-ல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ***51A*** பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

## IV. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. குடியுரிமைச் சட்டம் | - | அ) ஜவகர்லால் நேரு |
| 2. முகவுரை | - | ஆ) 42-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் |
| 3. சிறிய அரசியலமைப்பு | - | இ) 1955 |
| 4. செம்மொழி | - | ஈ) 1962 |
| 5. தேசிய அவசரநிலை | - | உ) தமிழ் |

| விடைகள்: | 1 - இ | 2 - அ | 3 - ஆ, | 4 - உ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. அரசியலமைப்பு என்றால் என்ன?**

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.
- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அரசியலமைப்பே அச்சாணி ஆகும்.
- அரசின் பல்வேறு துறைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளிடையே அதிகார பங்கீட்டை கட்டமைப்பு செய்யவும் சம்மந்தப்பட்டதாகும்.
- அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A) தோன்றியது.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?**

- 'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
- இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும்.
- இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- இந்திய அரசியலமைப்பின் பாகம் II 5 லிருந்து 11 வரையுள்ள பிரிவுகள் குடியுரிமையை பற்றி விளக்குகிறது.

**3. எத்தனை வகையான அடிப்படை உரிமைகள், இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப்படுகின்றன?**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12 லிருந்து 35 வரையுள்ள பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

- தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன.
  1. சமத்துவ உரிமை
  2. சுதந்திர உரிமை
  3. சுரண்டலுக்கெதிரான உரிமை
  4. சமய சார்பு உரிமை
  5. கல்வி, கலாச்சார உரிமை
  6. அரசியலமைப்பு, சட்ட மேல்முறையீட்டு உரிமைகள்

**4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?**

- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஒரு ஆணையாகும்.
- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

**5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?**

- 2004ம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது.
- அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன.
- அவை, தமிழ்(2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு(2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

**6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?**

- போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 352ன் கீழ் அவசர நிலையை அறிவிக்கலாம்.
- போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசரநிலை' எனப்படுகிறது.
- ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும் பொழுது அது "உள்நாட்டு அவசர நிலை" எனப்படுகிறது.
- இந்தவகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

**7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**

- **சட்டமன்ற உறவுகள்** - மத்திய பாராளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.
- **நிர்வாக உறவுகள்** - ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது, மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது.
- **நிதி உறவுகள்** - மத்திய-மாநில அரசுகள், அரசியலமைப்பு சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துக்கள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டது.
- இது நெகிழாத் தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் பாராளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவை, ஒரு சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- ♣ சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகைசெய்கிறது.

**2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.**

| அடிப்படை உரிமைகள் |
|---|
| 1. சமத்துவ உரிமை |
| 2. சுதந்திர உரிமை |
| 3. சுரண்டலுக்கெதிரான உரிமை |
| 4. சமய சார்பு உரிமை |
| 5. கல்வி, கலாச்சார உரிமை |
| 6. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை |

**1. சமத்துவ உரிமை**

- ♣ பிரிவு 14- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- ♣ பிரிவு 15- மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடைசெய்தல்.
- ♣ பிரிவு16- பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்
- ♣ பிரிவு17- தீண்டாமையை ஒழித்தல்
- ♣ பிரிவு 18- இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்

**2. சுதந்திர உரிமை**

- ♣ பிரிவு 19 - பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும், மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- ♣ பிரிவு 20 - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- ♣ பிரிவு 21 - வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை
- ♣ 21A - தொடக்கக்கல்வி பெறும் உரிமை
- ♣ பிரிவு 22 - சில வழக்குகளில் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

**3. சுரண்டலுக்கெதிரான உரிமை**

- ♣ பிரிவு 23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற
- ♣ வியாபாரத்தைத் தடுத்தல்
- ♣ பிரிவு 24 - தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்

**4. சமய சார்பு உரிமை**

- ♣ பிரிவு 25 - எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- ♣ பிரிவு 26 - சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை
- ♣ பிரிவு 27 - எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்,
- ♣ பிரிவு 28 - மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

**5. கல்வி, கலாச்சார உரிமை**

- ♣ பிரிவு 29 - சிறுபான்மையினரின் எழுத்து மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு
- ♣ பிரிவு 30 - சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**6. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**

- ♣ பிரிவு 32 - தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமையை பெறுதல்.

**3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.**



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை |
|---|
| அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை |
| ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை |
| இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை |
| ஈ) ஆவணக் கேட்பு பேராணை |
| உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை |

➲ **அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு-32)**

- ♣ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- ♣ இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- ♣ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

**அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை**

- ♣ சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை**

- ♣ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினை சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

**இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை**

- ♣ ஒரு கீழ்நீதிமன்றம் தனது சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**ஈ) ஆவணக் கேட்பு பேராணை**

- ♣ உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசிலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

**உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை**

- ♣ இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில், அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

**4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.**

| வ.எண் | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது. | இது அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது. |
| 2. | அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| 3. | இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| 4. | இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| 5. | இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது. | இந்த கொள்கைகளை செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொ ருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது |
| 6. | இவை இயற்கையான உரிமைகள். | இவை மனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது. |



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

## புத்தக வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. GNP யின் சமம்
   அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP
   ஆ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
   இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
   **ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்**

2. நாட்டு வருமானம் அளவிடுவது
   அ) பணத்தின் மொத்தமதிப்பு ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
   இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு **ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு**

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது
   **அ) வேளாண்மை** ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

4. …………முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.
   அ) செலவு முறை **ஆ) மதிப்பு கூட்டு முறை** இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

5. GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?.
   அ) வேளாண் துறை **ஆ) தொழில்துறை** இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19 ல் …….. லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது
   அ) 91.06 **ஆ) 92.26** இ) 80.07 ஈ) 98.29

7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ……………..அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
   அ) 1 வது ஆ) 3 வது இ) 4 வது **ஈ) 2வது**

8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ………ஆண்டுகள் ஆகும்.
   **அ) 65** ஆ) 60 இ) 70 ஈ) 55

9. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?
   அ) நீர்பாசன கொள்கை **ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை**
   இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை

10. இந்திய பொருளாதாரம் என்பது
   **அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்** ஆ) தோன்றும் பொருளாதாரம்
   இ) இணை பொருளாதாரம் ஈ) அனைத்தும் சரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இந்தியாவில் மிகப்பெரிய துறை ***பணிகள்*** துறையாகும்.
2. GDP ***வளரும்*** பொருளாதாரத்தின் ஒரு குறியீடாகும்.
3. இரண்டாம் துறையை வேறுவிதமான ***தொழில்*** துறை என அழைக்கலாம்.
4. இந்தியா பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் ***பணிகள்*** துறையாகும்.
5. இந்தியா, உலகத்தில் ***ஆறாவது தரவரிசையில்*** மிகப்பெரிய பொருளாதார நாடாகும்.
6. இந்தியா ***ஐந்தாவது*** மிக வேகமாக வளரும் நாடாகும்.
7. GDP யின் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற நவீன மயமாக்கத்துடன் கூடிய விரைவான தொழில்மயமாக்கல் என்று ***தொழில்துறை*** கொள்கை கூறுகிறது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

### III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது.
   - i) குறைந்த தனிநபர் வருமானம்
   - ii) மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
   - iii) வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
   - iv) கிராமப்புறத் துறையின் சேமிப்பு திறனை முழுமையாக பயன்படுத்தாதது.

   ***அ) i, ii, மற்றும் iv சரியானவை*** ஆ) i, ii மற்றும் iii சரியானவை
   இ) i, ii, iii மற்றும் iv சரியானவை ஈ) i, iii, மற்றும் iv சரியானவை

### IV. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் | - | அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை |
| 2. விலைக் கொள்கை | - | ஆ) மொத்த நாட்டு உற்பத்தி |
| 3. GST | - | இ) தொழில் துறை |
| 4. தனி நபர் வருமானம் | - | ஈ) வேளாண்மை |
| 5. C+I+G+(X-M) | - | உ) பண்ட மற்றும் பணிகள் மீதானவரி |

| விடைகள்: | 1 - இ | 2 - ஈ | 3 - உ | 4 - அ | 5 - ஆ |
|---|---|---|---|---|---|

### V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. நாட்டு வருமானம் - வரையறு**

- ♣ நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- ♣ பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொருள் என்ன?**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்

**3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக**

- ♣ பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
- ♣ செல்வம் சமனற்ற முறையில் விநியோகம் செய்யப்படுவது குறித்து அறிந்து கொள்ள உதவுகிறது.
- ♣ பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- ♣ உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.
- ♣ வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
- ♣ பொதுத் துறை பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள பயன்படுகின்றது.
- ♣ பொருளாதாரத்தில் திட்டமிட வழிக்காட்டியாகவும் பயன்படுகிறது.

**4. தனி நபர் வருமானம் என்றால் என்ன?**

- ♣ தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- ♣ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டுவருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு**

- ♣ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பை மதிப்பு கூட்டு முறை எனப்படுகிறது.
- ♣ மதிப்புக் கூட்டு முறை = டீத்தூள்+பால்+சர்க்கரை = தேனீர் (இடைநிலைபண்டங்கள் = இறுதிப்பண்டம்)

www.Padasalai.Net www.TrbTnpsc.com



6. **GDPயில் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

| விவசாயத்துறை | தொழில் துறை | பணிகள் துறை |
|---|---|---|
| கால்நடை பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், சோளம், நிலக்கரி | இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோ மொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் | அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் |

7. **இந்தியாவில் 2017ல் GDP யின் துறைவாரியான பங்களிப்பை கூறுக.**
   - ♣ விவசாயம் - 17.01%
   - ♣ தொழில்கள் - 29.01%
   - ♣ பணிகள் - 53.09%

8. **இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை?**
   - ♣ தொழில் நுட்ப மேம்பாடு
   - ♣ தொழிலாளர் சீர்திருத்தம்
   - ♣ வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்துவது
   - ♣ பொருளாதார அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது

9. **இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**
   - ♣ வேளாண் கொள்கை
   - ♣ புதிய பொருளாதாரக் கொள்கை
   - ♣ உள்நாட்டு வர்த்தகக் கொள்கை
   - ♣ நாணய மற்றும் வங்கி கொள்கை
   - ♣ கூலிக்கொள்கை
   - ♣ தொழில் துறை கொள்கை
   - ♣ இறக்குமதி - ஏற்றுமதி கொள்கை
   - ♣ வேலைவாய்ப்புக் கொள்கை
   - ♣ நிதி மற்றும் பணவியல் கொள்கை

10. **சிறு குறிப்பு வரைக. 1) GNH 2) HDI**

1. **GNH**
   - ➲ **நான்கு தூண்கள்**
     1. நிலையான மற்றும் சமமான சமூகபொருளாதார வளர்ச்சி
     2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
     3. கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்
     4. நல்ல ஆட்சி
   - ➲ **9 கலங்கள்**
     - ♣ உளவியல் நலன்
     - ♣ உடல் நலம்
     - ♣ நேரம் பயன்பாடு
     - ♣ கல்வி
     - ♣ கலாச்சார பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
     - ♣ நல்ல ஆட்சி
     - ♣ சமூகத்தின் உயர்வு
     - ♣ சுற்றுச்சூழல் பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
     - ♣ வாழ்க்கைத் தரம்

2. **HDI**

   மனிதவள மேம்பாடு குறியீடு (HDI) - பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது.

## VII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. **நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.**

| நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் |
|---|
| 1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP) |
| 2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) |
| 3. நிகரநாட்டு உற்பத்தி (NNP) |
| 4. நிகரஉள்நாட்டு உற்பத்தி (NDP) |
| 5. தலா வருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI) |



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| |
|---|
| 6. தனிப்பட்ட வருமானம் (PI)<br>7. செலவிடத் தகுதியான வருமானம் (DI) |

1. **மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**
   - ♣ மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

   GMP = C + I + G + (X - M) + NFIA

   C - நுகர்வோர்　　I - முதலீட்டாளர்　　G - அரசு செலவுகள்

   X - M - ஏற்றுமதி - இறக்குமதி NFIA - வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகரவருமானம்.

2. **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**
   - ♣ ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

3. **நிகரநாட்டு உற்பத்தி (NNP)**
   - ♣ மொத்தநாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
   - ♣ நிகரநாட்டு உற்பத்தி (NNP) = மொத்தநாட்டு உற்பத்தி (GNP) - தேய்மானம்.

4. **நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)**
   - ♣ நிகரஉள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
   - ♣ நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) - தேய்மானம்.

5. **தலாவருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI)**
   - ♣ தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
   - ♣ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

   $$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டுவருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

6. **தனிப்பட்ட வருமானம் (PI)**
   - ♣ நேர்முக வரி விதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.
   - ♣ தனிப்பட்ட வருமானம் = நாட்டு வருமானத்தில் பெறு நிறுவனங்களின் வருமான வரி - பெரு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத வருவாய் - சமூகபாதுகாப்பு பங்களிப்பு + மாற்று வருவாய்.

7. **செலவிடத் தகுதியான வருமானம் (DI)**
   - ♣ தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.
   - ♣ DPI = தனிப்பட்ட வருமானம் - நேர்முகவரி (நுகர்வு முறையில்DI = நுகர்வுச்செலவு+சேமிப்பு)

2. **GDPI கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.**

| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீட்டு முறைகள் |
|---|
| 1. செலவினமுறை |
| 2. வருமானமுறை |
| 3. மதிப்பு கூட்டு முறை |

1. **செலவினமுறை**



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- ♣ இந்தமுறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும்.
- ♣ பல்வேறு வகையான செலவுகள் இச்சமன்பாட்டில் காணப்படுகிறது.

$$Y = C + I + G + (X - M)$$

**2. வருமானமுறை**

- ♣ பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.
- ♣ வருமான முறையில் GDPஐ கணக்கிடும்போது,

வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

**3. மதிப்பு கூட்டு முறை**

- ♣ மதிப்புக் கூட்டு முறையில், ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால், இறுதிப்பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- ♣ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்தமதிப்பு கிடைக்கிறது .
- ♣ இடைநிலைபண்டங்களின் கூட்டு = இறுதிப்பண்டம்

**3. இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.**

| GDP யில் பல்வேறு துறைகளின் பங்கு |
|---|
| 1. பணிகள் துறை |
| 2. தொழில் துறை |
| 3. வேளாண்மை துறை |

**1. பணிகள் துறை**

- ♣ நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதலில் (GVA) பணிகள் துறைகள் 2018-2019ல் 92.26 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளன.
- ♣ இந்தியாவில் மொத்த மதிப்பு கூடுதலான 169.61 லட்சம் கோடியில், 54.40% பணிகள் துறையின் பங்காகும்.
- ♣ வர்த்தகம், ஹோட்டல்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு - 18.62%
- ♣ நிதி, ரியல் எஸ்டேட் - தொழில் முறை சேவைகள் - 20.96%
- ♣ பொது நிர்வாகம், பாதுகாப்பு, பிற பணிகள் - 14.82%
- ♣ உலகில் இந்தியா பணிகள் துறையில் ஆறாவது இடத்தில் உள்ளது.

**2. தொழில் துறை**

- ♣ தொழில் துறையின் பங்களிப்பு 29.73% ம் இவற்றில்
- ♣ சுரங்கம் மற்றும் குவாரி - 2.7%
- ♣ உற்பத்தி - 16.83%
- ♣ மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல், பிற பயன்பாட்டு சேவைகள் - 2.67%
- ♣ கட்டுமானம் - 7.53% அடங்கும்
- ♣ உலகில் இந்தியா தொழில் துறையில் எட்டாவது இடத்தில் உள்ளது.

**3. வேளாண்மை துறை**

- ♣ வேளாண்மை சார்ந்த சார்பு துறையின் பங்கு 15.87% ஆகும்.
- ♣ விவசாயம், காடுகள் மற்றும் மீன்பிடித்தல் ஆகியவை அடங்கும்.
- ♣ விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகும்.
- ♣ உலகின் மொத்த விவசாய பொருட்களின் வெளியீட்டில் 7.39% இந்தியாவினால் வெளியிடப்படுகிறது.
- ♣ இந்திய பொருளாதாரத்தில் விவசாய துறையின் பங்களிப்பு, உலக சராசரி 6.4% விட அதிகமாக உள்ளது.



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக.

| வ.எண் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1. கருத்து | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து | பொருளாதார முன்னேற்றம் ஒரு பரந்த கருத்து |
| 2. வரையறை / பொருள் | ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியிட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும். | HDIயின் குறியீட்டின் முன்னேற்றம், வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது |
| 3. அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| 4. நோக்கம் | GDP, GNP, FDI, FII போன்ற அளவுகள் அதிகரிக்கும் | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை, எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம். |
| 5. கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது |
| 6. பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| 7. அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் |
| 8. நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| 9. அரசாங்க உதவி | அரசாங்க உதவி / ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. |
| 10. செல்வ பகிர்வு | மக்களிடையேயும் வருமானத்தை சமமாக விநியோகிக்கப்படுவதில்லை | தனிநபர்களிடையே செல்வத்தை சமமாக விநியோகிக்க முயற்சிக்கிறது. |

5. வளர்ச்சி பாதையின் அடிப்படையில் GDP மற்றும் வேலை வாய்ப்பு பற்றி விவரி.

➲ வளர்ச்சி பாதையில் GDP

- இந்தியா தன் வளர்ச்சி பாதையில் முதலாவதாக நெருக்கமான வர்த்தகக் கொள்கையை எடுத்துக் கொண்டது.
- இது உள்நாட்டு தொழில்களுக்கு ஒரு உந்துதலையும், வெளிநாட்டு பொருட்களையும், நிறுவனங்களையும் சார்ந்திருத்தலைக் குறைக்கும் நிலையையும் ஏற்படுத்தியது..
- இந்தியாவின் எல்லைகளைத் திறந்த வர்த்தகத்திற்குத் திறக்க முடிவு செய்து, அதன் பொருளாதாரம் தாராளமாயக்கப்பட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை இந்திய பொருளாதாரத்திற்குள் அனுமதிப்பதன் மூலம் 1991 ஆம் ஆண்டு வரை இந்த பார்வை தொடர்ந்தது.
- இந்தியாவில் கடந்த இரண்டு சகாப்தங்களாக GDP யின் நிலையான அதிக வளர்ச்சியால் தனிநபர் வருமானம் அதிகரித்தும், முழு வறுமை குறைந்தும் காணப்படுகின்றன.
- 12 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தியா தனி நபர் வருமானத்தில் நடுத்தர வருவாய் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

➲ வளர்ச்சி பாதையில் வேலைவாய்ப்பு

- ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு ஒரு உந்துதல் வழங்கப்பட்டது.
- இந்தியாவில் நிலப்பரப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக இருப்பதால் கிராமப்புற மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- வறுமைஒழிப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சி இந்திய வளர்ச்சிப்பாதையின் ஒரு பகுதியாகும்.
- பொதுத் துறைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கடுமையான ஒழுங்கு முறை மற்றும் தரநிலைக்கு உட்பட்டவை ஆயின.
- பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் 65 ஆண்டுகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட 44 % குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர். 15 வயதும் அதற்கு மேலும்



Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

உள்ள மக்கள் தொகையில் 63 % பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். இது ஒப்பீட்டளவில் குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில் 71% ஆகும்.

- ♣ இந்தியா வேளாண்மையிலிருந்து மிக விரைவாக பணிகளுக்கு மாறியது. இந்திய பொருளாதாரத்தில் சில வளர்ந்து வரும் பெரும் உற்பத்தியாளர்கள் உள்ளனர்.

**6. கீழ்க்கண்ட பொருளாதார கொள்கைகளை விவரி.**

| பொருளாதார கொள்கைகள் |
|---|
| 1) விவசாய கொள்கை<br>2) தொழிற் கொள்கை<br>3) புதிய பொருளாதாரக் கொள்கை |

**1. விவசாய கொள்கை**

- ♣ உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதி பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.
- ♣ உள்நாட்டு வேளாண் உற்பத்தி அங்காடிகளில் ஒரு குறிப்பிட்ட விளைவுகளை அடைவதற்கான இலக்கினை அடைய வேளாண் கொள்கைகளை பொதுவாக அரசாங்கங்கள் அமல்படுத்துகின்றன.
- ♣ சில பரவலான கருப்பொருள்கள், இடர் மேலாண்மை மற்றும் சரிசெய்தல், பொருளாதாரநிலைத் தன்மை, இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டு பொருட்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண்கொள்கையில் அடங்கும்.
- ♣ சில வேளாண்கொள்கைகள். விலைக் கொள்கை, நில சீர்திருத்தகொள்கை, பசுமைப்புரட்சி, பாசனக் கொள்கை, உணவுக் கொள்கை, விவசாய தொழிலாளர் கொள்கைமற்றும் கூட்டுறவு கொள்கை போன்றவைகளாகும்.

**2. தொழிற் கொள்கை**

- ♣ தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது வேலை வாய்ப்பை உருவாக்குகிறது.
- ♣ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.
- ♣ நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.
- ♣ உண்மையில், தொழில் துறைவளர்ச்சி, புதிய பண்ணை தொழில நுட்பம் மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவித்து பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.
- ♣ தொழில் துறை கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக தொழில் கொள்கைகள், ஜவுளித் தொழில் கொள்கை, சர்க்கரை தொழில் கொள்கை, தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை, சிறு தொழில் தொழில் கொள்கை மற்றும் தொழில் துறை தொழிலாளர் கொள்கை ஏற்படுத்தப்பட்டவையாகும்.

**3. புதிய பொருளாதாரக் கொள்கை**

- ♣ புதிய பொருளாதார சீர்திருத்தம் பொதுவாக, LPG அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.
- ♣ இந்த மாதிரியின் பிரதானகுறிக்கோள், இந்திய பொருளாதாரம் உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களுடன் ஒப்பிடுவதற்கு உதவும் திறனுடன் கூடிய உலகில் வேகமாக வளரும் பொருளாதாரத்தை உருவாக்குவது ஆகும்.
- ♣ இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.